Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR
Case No.C.C.No. 101/2024

Deposition of witness for Prosecution P.W.3 Date : 27.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | ராமச்சந்திரன் | Village : | அக்ரஹாரசாமக்குளம் |
| Father's Name : | கருப்பசாமி | Taluk : | அன்னூர் |
| Age : | 38 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of June 2025 **(Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது அக்ரஹாரசாமக்குளம் செங்காட்டில் குடியிருந்து கூலி வேலைக்கு சென்று வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன பாட்டியை எனக்கு தெரியும். அ.சா.1, 2 ஆகியோரை எனக்கு தெரியும். ஒரே ஊரில் குடியிருக்கிறார்கள். விபத்து சம்பவத்தினை நான் நேரில் பார்த்தேன். கடந்த 05.04.2024 ம் தேதி என்று நினைக்கிறேன் அன்று அந்த பாட்டி லைட் போட்டுவிட்டு அவரது இன்னொரு வீட்டிற்கு ரோட்டிற்கு வெள்ளமடை ரோட்டிற்கு இடது புறம் ஓரமாக சென்று கொண்டிருந்த போது அவர் மீது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தினை ஓட்டிச் சென்று மோதிவிட்டார். அவரும் விழுந்துவிட்டார். நான் சென்று எதிரியை தூக்கிவிட்டேன். அந்த பாட்டிக்கு தலையின் பின்புறம் அடிப்பட்டுவிட்டது. ஆம்புலன்சில் கே.எம்.சி.ெஹச் மருத்துவமனைக்கு அந்த பாட்டியை எடுத்துச் சென்றார்கள். பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அந்த நாள் இரவே அந்த பாட்டி இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். விபத்து நடந்த போதே நான் பார்த்தேன். அப்போது எதிரி இருசக்கர வாகனத்தினை தெளிவாக நிதானமாக தான் ஓட்டி வந்தார் ஆனால் அந்த பாட்டி மீது மோதிவிட்டார். இந்த விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தோட்டம் தோட்டமாக கூலி வேலை செய்து வருகிறேன். 05.04.2024 ம் தேதி அன்று நான் தேவம்பாளையம் ரோட்டில் உள்ள தோட்டத்தில் வேலை செய்தேன். என் வேலை நேரம் குறிப்பிட்டு கூற முடியாது. விபத்து நடந்த சமயத்தில் அன்று நான் இரவு 7, 7.30 வரை வேலை செய்திருந்தேன். விபத்து நடந்த இடத்திற்கும் நான் வேலை செய்த இடத்திற்கும் இடையே 6 கி.மீ. இருக்கும். விபத்து நடைபெற்ற இடமானது வீட்டிற்கு செல்லும் தடமாகும். தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை போலீசார் விசாரித்த போது சொல்லியுள்ளேன். மறுநாள் என்னை விசாரித்த போது சொன்னேன். மறுநாள் நான் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றேனா என்றால்இல்லை, மறுநாள்அந்த இடத்தினை ஜீப்பில் வந்து பார்த்தார்கள். அப்போது விசாரித்த போது சொன்னேன். 3 போலீசார் வந்தார்கள், என்னை விசாரித்த

போலீசார் யார் என்று தெரியாது. நான் இரண்டு கையொப்பங்கள் போட்டுக் கொடுத்தேன். நான் சொன்னது போல் சம்பவ இடத்திற்கும் செல்லவில்லை என்றும், சம்பவத்தினை நான் பார்க்கவில்லை என்றும், அ.சா.1 கேட்டுக் கொண்டதற்காக அவர் என் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு. விபத்து நடந்த இடம் நேர் ரோடு தான். அது அதிகமாக போக்குவரத்து உள்ள சாலை தான். அந்த பாட்டியை எனக்கு முன்னரே தெரியும். அவருக்கு இதற்கு முன்னால் விபத்து நடைபெற்றதா என்று எனக்கு தெரியாது.

Sd/−V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.